# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1875/33 - 2014 අගෝස්තු මස 14 වැනි බ්‍රහස්පතින්දා - 2014.08.14

*1875/33 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 14 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு**

*அறிவித்தல்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44 ஆவது உறுப்புரையின் (1) (அ) என்னும் பந்தியின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, என்னால் 2010, நவெம்பர் மாதம் 22 ஆந் திகதிய 1681/3 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு, காலத்துக்குக்காலம் திருத்தப்பட்ட அறிவித்தலானது, 2014, ஓகத்து மாதம் 08 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேலும் திருத்தப்படுகிறது என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி.*

*சனாதிபதி அலுவலகம்,*
*கொழும்பு 01,*
*2014, ஓகத்து 11.*

**அட்டவணை**

*(1) அவ்வறிவித்தலில் மக்கள் தொடர்பு, மக்கள் அலுவல்கள் அமைச்சர் (இல. 58) என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :-*

*(அ) அதன் நிரல் I இலுள்ள 3 ஆவது விடயத்தையடுத்து பின்வரும் விடயங்களை சேர்ப்பதன் மூலமும் :-*

*"4. குறைந்த வருமானம் பெறுநர், ஆகக் குறைந்த வசதிகளற்ற வீடுகளில் வாழ்கின்ற மக்களின் நலன்புரி நிலைமையை கட்டியெழுப்புவதற்காக வேண்டிய திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை தயாரித்தல். ";*

*(2) அவ்வறிவித்தலில் தாவரவியல் பூங்காக்கள், பொதுப் பொழுதுபோக்கு அலுவல்கள் அமைச்சர் (இல. 67) என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :-*

*(அ) அதன் நிரல் II இலுள்ள 3 ஆவது விடயத்தையடுத்து பின்வரும் விடயத்தை சேர்ப்பதன் மூலமும் :-*

*"4. அப்பே கம" ;*

*8- 1020*